# பூமியின் இறுதி சம்பவங்கள்



பாடம் 12 ஜூன் 22, 2024


LEY
I
II
DE DIOS
V
III
IV
X
DIOS
CREADOR
EL DIA
SABADO
666
" சத்தியத்தை வாங்கு, அதை விற்காதே;
அப்படியே ஞானத்தையும் உபதேசத்தையும்
புத்தியையும் வாங்கு." (நீதிமொழிகள் 23:23)

வரலாற்றின் முடிவைக் குறிக்கும் உச்சக்கட்டம் உலகம் முழுவதும் நற்செய்தியைப் பிரசங்கிப்பதேயாம் (மத்தேயு 24:14).

நற்செய்தி பிரசங்கப்படுவதற்கு முன்னதாக பெந்தேகொஸ்தே நாளில் ஊற்றப்பட்ட வல்லமையோடே பரிசுத்த ஆவியின் ஊற்றப்படுதல் இருக்கும். இந்த சம்பவமே “பின்மாரி” என்று அழைக்கப்படுகிறது.

யார் பின்மாரியை பெற்றுக்கொள்வார்கள்? தேவனுக்கு உண்மையாய் இருக்கவேண்டும் என்று தீர்மானம் எடுத்தவர்கள், தேவனுடைய கற்பனைகளுக்கு கீழ்படிவோர், மற்றும் அவரை துதிப்பவர்கள். இவர்களெல்லாரும் “உயிருள்ள தேவனின் முத்திரையால்” முத்தரிக்கப்படுவார்கள் (வெளி. 7:2).





இறுதி நெருக்கடிக்கு ஆயத்தமாகுதல்:

- வார்த்தையால் இயக்கப்படுதல்.
- நெற்றிகளில் முத்திரையிடப்படுதல்.
- தொழுகையில் உண்மையாயிருத்தல்.

பரத்திலிருந்து வல்லமை:

- பின்மாரி.
- நற்செய்தி பிரசங்கிக்கப்படுதல்.



# இறுதி நெருக்கடிக்கு ஆயத்தமாகுதல்

# வார்த்தையால் இயக்கப்படுதல்

"உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது." (சங்கீதம் 119:105)

உலகத்தின் முடிவில் சத்தியத்தை எங்கு கண்டடையலாம் என்று உங்களுக்கு தெரியுமா? இதுதான் வழி:


"சத்தியத்தை வாங்கு, அதை விற்காதே;" (நீதி. 23:23)



"சத்தியத்தையும் அறிவீர்கள்," (யோவான் 8:32)

"உம்முடைய வசனமே சத்தியம்." (யோவான் 17:17)

"உம்முடைய வசனத்தின் பிரசித்தம் வெளிச்சம் தந்து, பேதைகளை உணர்வுள்ளவர்களாக்கும்." (சங். 119:130)




இறுதி தருணங்களில், சாத்தான் உண்மையான அற்புதங்களை செய்ய அனுமதிக்கப்படுவான், மேலும் அவை மறுக்கமுடியாத அளவுக்கு நுட்பமான ஏமாற்றுத்தனங்களை காட்டுவான்.(வெளி. 13:13-14; மத். 24:24).

தெளிவான முழு வேத அறிவும், பரிசுத்த ஆவியின் உதவியும், சத்தியத்திலே உறுதியாய் நாம் நிற்க அனுமதிக்கும் (2 பேது. 1:19-21).

# நெற்றிகளில் முத்திரையிடப்படுதல்


"பின்பு நான் பார்த்தபோது, இதோ, சீயோன் மலையின்மேல் ஆட்டுக்குட்டியானவரையும், அவரோடேகூட அவருடைய பிதாவின் நாமம் தங்கள் நெற்றிகளில் எழுதப்பட்டிருந்த இலட்சத்து நாற்பத்து நாலாயிரம்பேரையும் நிற்கக்கண்டேன்." (வெளிப்படுத்தல் 14:1)



மூன்று வழிகளில் தேவனுடைய முத்திரையை கண்டறியலாம்:

1. பரிசுத்த ஆவியானவர். எல்லா வயது விசுவாசிகளும் அவரால் முத்தரிக்கப்படுகிறார்கள் (எபே. 4:30).
2. தேவனுடைய நாமம், அல்லது குணம். ஜெயம் பெற்ற எல்லாரும் இதை கொண்டிருப்பார்கள் (வெளி. 14:1; 22:4).
3. அங்கிகரிக்கப்பட்ட அடையாளம் (வெளி. 9:4; எசே. 9:4).

தேவன் தம்முடைய முத்திரையை அவரை தொழுதுகொள்பவர்களின் தனித்துவமான அடையாளமாக, 10 கற்பனைகளில் ஒன்றில் வைத்திருக்கிறார், (எசே. 20:20).



| முத்திரையின் மூலக்கூறுகள் | உதாரணம்: யூரோ காயின் (ஸ்பெயின்) | ஓய்வுநாள் (யாத் 20:8-11) |
|---|---|---|
| பெயர் | பிலிப்பு VI | யேகோவா |
| தகுதி | இராஜா | சிருஷ்டிகர் |
| எல்லை | ஸ்பெயின் | வானங்கள், பூமி மற்றும் சமுத்திரம் |



# நெற்றிகளில் முத்திரையிடப்படுதல்

“பின்பு நான் பார்த்தபோது, இதோ, சீயோன் மலையின்மேல் ஆட்டுக்குட்டியானவரையும், அவரோடேகூட அவருடைய பிதாவின் நாமம் தங்கள் நெற்றிகளில் எழுதப்பட்டிருந்த இலட்சத்து நாற்பத்து நாலாயிரம்பேரையும் நிற்கக்கண்டேன்.” (வெளிப்படுத்தல் 14:1)





முத்திரை, சின்னம் அல்லது அடையாளத்தை இரண்டு வழிகளில் பெற்றுக் கொள்ளலாம்: நெற்றிகளில் அல்லது கைகளில். விசுவாசிகள் தங்கள் நெற்றிகளில் பெற்றுக்கொள்வார்கள், அவிசுவாசிகள் தங்கள் நெற்றிகளில் அல்லது தங்கள் கைகளில் பெற்றுக்கொள்வார்கள் (வெளி. 13:16). இரண்டுக்கும் என்ன வித்தியாசம்?

**நெற்றி**

- அறிவுசார் நம்பிக்கை
- தொழுது கொள்பவரை விசுவாசித்தல்

**கை**

- ஆர்வம் (லாபம் பெறுதல்)
- விளைவுகளின் பயத்தால் தொழுதுகொள்தல்




தொழுகைக்கான காரணங்களைக் குறித்து சாத்தான் கவலைக்கொள்வதில்லை, தேவன் மாத்திரமே நேர்மையான மற்றும் முழுமையான வழிபாட்டை ஏற்றுக்கொள்கிறார் (ரோ. 12:1).

# தொழுகையில் உண்மையாயிருத்தல்

"அந்த மிருகத்தின் முத்திரையையாவது அதின் நாமத்தையாவது அதின் நாமத்தின் இலக்கத்தையாவது தரித்துக் கொள்ளுகிறவன் தவிர வேறொருவனும் கொள்ளவும் விற்கவும் கூடாதபடிக்கும் செய்தது." (வெளிப்படுத்தல் 13:17)




மிருகத்தின் முத்திரையை பெற்றுக்கொள்ள நிராகரிக்கிறவர்கள் வாங்கவும் விற்கவும் முடியாது, மரண எச்சரிப்பு கொடுக்கப்படும் (வெளி. 13:15-17). மறுபுறம், அதை பெற்றுக் கொண்டார்களானால் கடைசி வாதைகளால் வாதிக்கப்படுவார்கள், நித்திய ஜீவனை இழந்து இரண்டாம் மரணத்துக்கு பங்குள்ளவர்களாவர்கள் (வெளி. 16:2 ; 14:9-11; 20:4, 13-15).




அப்படியானால் மிருகத்தின் முத்திரை என்பது என்ன? ஒரு சிப்பா, பார்கோடா, அல்லது சில வகையான உடல் கட்டுபாடா? ஓய்வுநாள் விசுவாசிகளின் வெளிப்படையான அடையாளமாக(சின்னமாக) இருக்கமானால், மிருகத்தின் முத்திரையும் அதே வகையில் தானே இருக்கும்? ஆராதனை நாளின் மாற்றத்தைக் குறித்து வேதம் கூறவில்லையாதலால், ஞாயிறை ஆராதனை நாளாக ஏற்றுக்கொள்பவர்கள் அந்த மாற்றத்தை ஏற்படுத்திய சபையின் அதிராரத்தையும் (666ஆக கண்டறிப்பட்டுள்ளது) ஏற்றுக்கொள்கிறார்கள்.




எந்த அதிகாரத்தை நாம் ஏற்றுக்கொள்ளப் போகிறோம்? மனித நிறுவனத்தின் அதிகாரமா அல்லது அவருடைய வார்த்தையில் தெளிவாக வெளிப்பட்ட, தேவனுடைய அதிகாரமா?



# பரத்திலிருந்து வல்லமை




# பின் மாரி

“சீயோன் குமாரரே, உங்கள் தேவனாகிய கர்த்தருக்குள் மகிழ்ந்து களிகூருங்கள்; அவர் தக்கபடி உங்களுக்கு முன்மாரியைக் கொடுத்து, உங்களுக்கு முன்மாரியையும் பின்மாரியையும் ஏற்கனவே வருஷிக்கப்பண்ணுவார்.” (யோவேல் 2:23).

பரிசுத்த ஆவியின் ஊற்றப்படுதலுக்கு மழையை உருவகமாக பயன்படுத்துகிறார் தீர்க்கதரிசி யோவேல் (யோவேல் 2:23, 28). பெந்தேகொஸ்தே நாளில் பேதுரு தன்னுடைய உரையில் இதை பயன்படுத்துகிறார் (அப் 2:14-17).

இந்த “மழை” தேவனுடைய அறிவை தன்னோடு கொண்டு வருகிறது (ஓசியா. 6:3). தன் காலத்தில், ஒரே நாளில் ஆயிரகணக்கானனோரை மாற்றினார் (அப் 2:41).



இஸ்ரவேல் வாழ்ந்த மத்திய தரைகடல் காலநிலையில், முன்மாரி (அக்டோபரில் வரும்) நிலத்தை பண்படுத்த உதவும். இரண்டாவது மழை, பின்மாரி என்று அறியப்படும்(ஏப்ரலில் வரும்), தானியங்கள் முளைக்க பூமிக்கு பலன் கொடுக்கும்.

அதுபோல சபையும் பரிசுத்த ஆவியின் மழையால் ஆரம்பிக்கப்பட்டு, சுவிஷேசத்தின் இறுதி அறிவிப்பை சொல்ல, இறுதி அறுவடை பின்மாரியின் ஊற்றப்படுதலுக்கு பின் நடைபெறும்: கடைசி தலைமுறை விசுவாசிகளின் வல்லமைக்காக பரிசுத்த ஆவி ஊற்றப்படும் (வெளி. 18 :1).





# நற்செய்தி பிரசங்கிக்கப்படுதல்

"இவைகளுக்குப்பின்பு, வேறொரு தூதன் மிகுந்த அதிகாரமுடையவனாய், வானத்திலிருந்து இறங்கிவரக்கண்டேன்; அவனுடைய மகிமையினால் பூமி பிரகாசமாயிற்று." (வெளிப்படுத்தல் 18:1)

"மற்றொரு தூதன்" மிகுந்த வல்லமையோடு இறங்கி வருவதை யோவான் கண்டார். இந்த தூதனுடைய மகிமை முழு உலகத்தையும் நிரப்பிற்று (வெளி. 18:1). இந்த தூதன் அறிவிக்கிற செய்தி தான் என்ன?



இரண்டாம் தூதனின் செய்தி தான் இந்த தூதனின் செய்தியும்: பாபிலோன் விழுந்தது, அது எல்லா தேசங்களையும் கெடுத்து போட்டதே (வெளி. 18:2-3; 14:8).

"தேவனுடைய கற்பனைகளையும் இயேசுவின் மேலுள்ள விசுவாசத்தையும் காத்துக்கொள்ளுகிறவர்களாகிய" (வெளி. 14:12) விசுவாசிகள் மேல், பரிசுத்த ஆவி வல்லமையாக இறங்கி வரும், இவர்கள் சுவிசேஷத்தையும், நியாத்தீர்ப்பு துவங்கியதன் எச்சரிப்பையும், சிருஷ்டிகரை தொழுதுகொள்ளும்படியான அழைப்பையும் அறிவிப்பார்கள் (வெளி. 14:6-7).

பின்மாரியின் வல்லமைக்கு நன்றி, இந்த செய்திகளை எதிர்கொண்ட மனிதகுலம், இரண்டு சாத்தியகூறுகளில் ஒன்றை தேர்ந்தெடுக்கும்: தேவனுடைய முத்திரை அல்லது மிருகத்தின் முத்திரை (வெளி. 14:9-11).

அநேக சப்தங்கள் இறுதி செய்தியை அறிவிக்கும். முடிவுபரியந்தம் உண்மையாயிருக்கும்படி அநேகர் தீர்மானம் எடுப்பார்கள்.